செ.வெ.எண்: 62

# பத்திரிக்கைச் செய்தி

2008–2009ஆம் ஆண்டு வேளாண்மைத் துறையில் திட்டப் பணிகள் குறித்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம் 27.1.2009 ஆம் தேதி சென்னை சேப்பாக்கம் வேளாண்மை ஆணையர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

மாநில திட்டங்கள், மைய அரசு திட்டங்கள், மைய அரசு, மாநில அரசு இணைந்த திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதில் முக்கிய இனங்களான வேளாண் சாகுபடி பரப்பு, உற்பத்தி, உற்பத்தி திறன், செம்மை நெல் சாகுபடி, பயிர் காப்பீட்டு திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், நுண்ணீர் பாசனம், துல்லிய பண்ணையம், தேசிய தோட்டக்கலை இயக்கம், உழவர் சந்தை ஆகியவை குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. விதை மற்றும் உரம் விநியோகம் மற்றும் கையிருப்பு போதிய நிலையில் உள்ளது.

வேளாண்மை உற்பத்தியை பொறுத்தவரை 31.12.2008 முடிய நெல் சாகுபடி பரப்பு 21.50 லட்சம் எக்டர் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 31.12.2008 முடிய அதாவது 9 மாத சாதனையாக 18.86 லட்சம் எக்டரும், சிறுதானியங்களை பொறுத்தவரை 12 லட்சம் எக்டர் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, சாதனை 10.16 லட்சம் எக்டரும், கரும்புக்கு 3.50 லட்சம் எக்டர் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 2.60 லட்சம் எக்டரும் சாகுபடி செய்யப்பட்டு இயல்பான சாதனை அடையப்பட்டுள்ளது.

பயறு வகை மற்றும் எண்ணெய்வித்துக்களை பொறுத்த வரை ஜனவரி முதல் மார்ச் வரை விதைப்புக்கு உரிய பட்டம் என்பதால் குறியீட்டு இலக்கினை எளிதாக அடைய முடியும் என தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக நெல் சராசரியாக எக்டருக்கு 10,000 கிலோவிற்கும் கூடுதலாக உற்பத்தி செய்யப்படும் செம்மை நெல் சாகுபடி முறை 7.5 லட்சம் எக்டரில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை சுமார் 5.0 லட்சம் எக்டர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது விரிவாக்க பணியாளர்கள் மற்றும் விவசாயிகளின் கூட்டு முயற்சிக்கு இது ஒரு சான்றாகும்.

அதே போல தோட்டக்கலை பயிர்களான காய்கறிகள், பழங்கள், கிழங்கு வகைகள் மற்றும் மலர்கள் சாகுபடி பரப்பும் 9 மாத குறியீட்டை எட்டியுள்ளன.

இந்த ஆண்டு கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த பெருமழையால் காவிரி பாசன பகுதி மாவட்டங்களில் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் வேளாண் பயிர் சாகுபடி பரப்பு 5,77,838 எக்டரிலும், தோட்டக்கலை பயிர் சாகுபடி பரப்பு 19,205 எக்டரிலும் சாகுபடி செய்த பயிர்கள் முழுவதுமாக பாதிக்கப்பட்டு, 9,10,297 விவசாயிகளுக்கு ரூ.386 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டது.

2007–2008ஆம் ஆண்டில் வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் 5.34 இலட்சம் விவசாயிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, வறட்சி மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீட்டு தொகையாக ரூ. 267.62 கோடி வழங்கப்பட்டது. 2008–2009ஆம் நிதி ஆண்டிலும் இதுவரை 8.89 லட்சம் விவசாயிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு பிரிமியத் தொகையாக அரசு ரூ.17.10 கோடி செலுத்தியுள்ளது.

2007–2008ஆம் ஆண்டு மட்டுமின்றி 2008–2009ஆம் ஆண்டில் அரவை செய்யப்பட்ட கரும்புக்கும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளில் மைய அரசின் சட்டபூர்வ குறைந்தபட்ச விலை மற்றும் மாநில அரசின் பரிந்துரை விலை விவசாயிகளுக்கு நிலுவையின்றி வழங்கப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தியை பொறுத்த வரை, 2007–2008ஆம் நிதியாண்டில் 95.5 லட்சம் மெட்ரிக் டன் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, 100.35 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையப்பட்டது. 2008–2009 ஆம் ஆண்டுக்கு 108 லட்சம் மெட்ரிக் டன் என குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுமார் 6 லட்சம் எக்டர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டாலும் இந்நிதி ஆண்டு உற்பத்தி சுமார் 100 லட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9